**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.4–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை . 5ம்பிரதிவாதி ஆஜர். 2,3,46,7,8,9,14,16,17 முதல் 19,20 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.மற்றும் 3,4,56,7,8,9,14,16,17 முதல் 19,20 பிரதிவாதிகள் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் )

அ.வ.எண். 932/2015

பி.வா.சா.4 தினேஷ்குமார் த/பெ சண்முகம்

**17 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :–**

1. வாதியைவிட நான் ஐந்து வயது மூத்தவர் ஆவேன். வாதி என்னுடைய உடன் பிறந்த சகோதரி. நான் மேசர் ஆன பிறகு தனியாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவோ அல்லது பாகப்பிரிவினை வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் சகோதரி தாக்கல் செய்த இந்த வழக்கிற்க்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

2. என் சகோதரிக்கோ இந்த வழக்கு தாக்கல் செய்தவதற்க்கு எவ்வித முகாம்தரமும் மற்றும் என்தரப்பில் தாவா சொத்தில் பங்குகள் கேட்பதற்க்கோ எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் 17 முதல் 19 ஆகியோர் வாங்கி சொத்துக்களான அயிட்டம் 1ல் கண்டுள்ள 4வது பகுதி சொத்து இந்த 17 முதல் 19 பிரதிவாதிகள் கிரையம் பெற்றவர்கள் என்றால் சரிதான். ஆனால் என்னையும், என் சகோதரியையும் கட்டுப்படுத்தாது.

3. மேற்படி சொத்திற்க்கு புல எண்.269/3ல் 35 செண்டும், புல எண். 269/4ல் 65 செண்டும் உள்ள 1 ஏக்கர் ஒரே இடமாக உள்ளதை 17 முதல் 19 பிரதிவாதிகள் 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் என்னையும், என் சகோதரியையும் கட்டுப்படுத்தாது. தற்போது என்னிடம் காட்டப்டும் வா.சா.12 ஆவணத்தில்

குறிப்பிடப்பட்டுள்ள புல எண்.269/3 விபரம் பற்றி தெரியுமா என்றால் பார்த்து தெரிந்துகொண்டேன். மேலும் தற்போது என்னிடம் காட்டப்டும் பி.வா.சா.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்.269/4 விபரம் பற்றி தெரியுமா என்றால் பார்த்து தெரிந்துகொண்டேன்.

4. மேற்கண்ட இரு கிரையங்களும் தகுதி பிரதிபிரஜானத்திற்க்கு தான் ஏற்பட்டது என்றால் தவறு. எங்களுடைய உரிமையை மறைத்துதான் கிரையம் ஏற்பட்டது. புல எண். 269/3 ல் உள்ள 35 செண்ட் பூமியை 18.01.2002 தேதியில் உள்ள வா.சா.11 ஆவணமான கிரையபத்திரன் படி 1ம் பிரதிவாதி சுப்பிரமணியம் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். ஆனால் என்னையும், என் சகோதரியையும் கட்டுப்படுத்தாது.

5. பின்னிட்டு 17 முதல் 19 பிரதிவாதிகள் மேற்கண்ட ஆவணத்தின் படி கிரையம் பெற்ற சுப்பிரமணியத்தினிடமிருந்து 17 முதல் 19 பிரதிவாதிகள் 28.01.2009 அன்று கிரையம் பெற்றுள்ளார்கள் அது வா.சா.12 ஆவணம் என்றால் சரிதான். ஆனால் என்னையும், என் சகோதரியையும் கட்டுப்படுத்தாது. 1ம்பிரதிவாதியின் மகன்கள் தான் 2 முதல் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக தான் இருந்துவந்தார்கள் என்றால் சரிதான்.

6. 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தை 1ம் பிரதிவாதி கூட்டுக்குடும்ப தலைவராக இருந்து வந்தார் என்றால் சரியல்ல. புல எண். 269/3 ல் உள்ள 35 செண்ட் பூமி மற்றும் புல எண். 269/4ல் உள்ள 65 செண்ட் பூமியையும் மொத்தம் 1 ஏக்கர் பூமியை குடும்ப அவசியத்திற்க்காக தான் 1ம் பிரதிவாதியும் மற்றும் அவர்களுடைய மகன்களான 2 முதல் 4 பிரதிவாதிகள் கிரையம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

7. மேற்படி கிரையம் பெற்ற விபரம் எனக்கு தெரிந்து தான் நடந்தது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பூமியில் 17 முதல் 19 பிரதிவாதிகள் அபிவிருத்தி செய்து கட்டிடங்கள் கட்டி தொழில் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேலும் கட்டிடங்கள் உள்ளது. மீண்டும் சாட்சி 17 முதல் 19

பிரதிவாதிகள் தொழில் செய்து வரவில்லை என்று சொல்கிறார். மேற்படி 17 முதல் 19 பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிப்பதற்க்காக இந்த வழக்கு பகுதி 4 அயிட்டம் 1 சொத்து சம்மந்தமாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அது சம்மந்தமாக என் சகோதரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

17 முதல் 19 பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.